மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 1971-72-ல் 8.

(இ) காலதாமதம் எதுவும் ஏற்படவில்லை.

Television in Educational Institutions in Madras City.

*177. Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to introduce television in educational institutions in Madras City; and

(b) if so, the details thereof?

சென்னை மாநகரில் உள்ள கல்வி நிறுவனங்களில் டெலிவிஷன் (Television)

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் உள்ள கல்வி நிறுவனங்களில் டெலிவிஷன் (Television) நிறுவுவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) சென்னையில் டெலிவிஷன் நிறுவப்பட்டபின் இது பரிசீலிக்கப்படும்.

Salem Municipal Council

*178. Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether a number of Councillors of the Salem Municipal Council were removed from the Council with police aid about the 25th February 1972; and

(b) if so, the details thereof?

1972 ஆகஸ்ட் 22]

சேலம் நகராட்சி மன்றம்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சேலம் நகராட்சி மன்றத்தின் உறுப்பினர்கள் பலர் 1972 பிப்ரவரி 25 ஆம் நாள் அளவில் காவலர் உதவியுடன் மன்றத்திலிருந்து அகற்றப் பட்டனரா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) 24—2—72-ம் தேதியன்று சேலம் நகராட்சி மன்றத்தலைவர் ஒரு உறுப்பினரால் மொழியப்பட்ட, மற்றொரு உறுப்பினரால் வழி மொழியப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தை தள்ளுபடி செய்ததாகவும், வேறு இரண்டு உறுப்பினர்கள் அத்தீர்மானத்தை ஓட்டுக்கு விடும்படியாகக் கேட்டு மன்றத்தின் நடவடிக்கைகளை தடுத்ததாகவும், தலைவர் காவல்துறையின் உதவியால் அவ் விரண்டு உறுப்பினர்களையும் மன்றத்திலிருந்து வெளியேற்றியதாகவும் கூறப் படுகிறது.

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன்: தலைவர் அவர்களே, அங்கத்தினர் அந் தஸ்து பாதிக்கப்படுவதால், இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் போலீஸ் தலை யிடாதிருப்பது நல்லது. ஆகையினால் போலீஸ் தலையீட்டை அரசு தவிர்க்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஒரு சபையின் நடவடிக்கைகளைக் கவனிக்கும் முழுப் பொறுப்பும் சபையின் தலை வருக்கு வருகிறது. ஆனால் சட்டப்படி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருகிறார்கள். தலைவர் தனக்குள்ள அதிகாரத்தை வைத்து அத் தீர்மானத்தை நிராகரித்தார். அதை ஓட்டுக்கு விடவேண்டுமென்று உறுப் பினர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். அது மறுக்கப்படவே, மேலும் சபை நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்படுகிற நிலையில் அவர்கள் செயல்படவே காவல் துறையினர் உதவியை சபைத் தலைவர் நாடுவதன் அவசியம் ஏற் பட்டது. அதற்குப் பிறகும் அந்த இடத்தைவிட்டு நகர மறுத்து விட்டார் கள். அதன் பிறகு நாற்காலியோடு சேர்த்து தூக்கி வெராண்டாவில் இறக்கி விட்டுவிட்டு நாற்காலியை மட்டும் உள்ளே கொண்டுவந்தார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது.